திரு. சி. கோவிந்தராசன் : மாவட்டத் தலைமை மருத்துவ நிலையங்களில் கூட்டம் அதிகமாக இருக்கிறது. குறிப்பாக கடலூர் மருத்துவ மனையை எடுத்துக்கொண்டால் கண் சிகிச்சைப் பிரிவு கிடையாது. சென்னைக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. ஆகவே அங்கே க்ளுகோஸ் டாலரன்ஸ் டெஸ்டுக்கும், பதாலஜிகல் லாப்ரடரி ஏற்படுத்துவதற்கும்—கண் சிகிச்சைப் பிரிவு ஒன்றையும் ஏற்படுத்துவார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி மேலூர் மருத்துவ மனையைப் பற்றியது. அதைவிட்டு, அவரவர்கள் தங்கள் தங்கள் தொகுதி கேள்வியைக் கேட்பது முறை அல்ல.

திரு. எஸ். ஜே: ராமசாமி : அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல மேலூர் மருத்துவ மனையை விரிவுபடுத்த அதன் பக்கத்தில் உள்ள பள்ளிக் கட்டிடத்தை எடுத்துக்கொண்டால் பள்ளிக்கு என்ன செய்வது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யப்படும். பள்ளிக்கூடத்திற்கான இடம் போக பாக்கி இருக்கிற இடம் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கரு. சிமைச்சாமி : சார், அது அந்தப் பள்ளிக்கூடத்திற்கு விளையாட்டு கிரவுண்டாக இருக்கிறது. இதை நல்ல முறையிலே பரிசீலனை செய்யவேண்டும். ஆஸ்பத்திரியை விரிவுபடுத்துவதில் ஆட்சேபணையில்லை. அதற்கு வேண்டுமானால் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே இதை மறுபடியும் பரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதை விரிவாக்கவேண்டுமென்றால் அந்த மருத்துவ மனைக்கு அருகிலேதான் செய்ய வேண்டும். புறம்போக்கு நிலம் இருப்பதாலே வெகு தூரத்திலே செய்ய முடியாது. ஆகவே அந்தப் பள்ளியை ஒட்டிய இடத்திலேதான் செய்ய முடியும்.

திரு. கரு. சிமைச்சாமி : நாளைக்கு அந்தப் பள்ளிக்கூடம் விஸ்தரிக்கப் படக்கூடிய சூழ்நிலையையும் உத்தேசித்து மறுபடியும் பரிசீலனை செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்தச் சூழ்நிலைகளைக் கருதித்தான் அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

திரு. இல. பலராமன் : பள்ளிக்கூடத்திற்கு அருகாமையில் மருத்துவ மனை வைக்கப்படுவதால் தொத்து வியாதியஸ்தர்கள் மூலமாக வியாதி பரவிவிடும். எனவே பள்ளிக்கூடமும் ஆஸ்பத்திரியும் அருகாமையில் இருப்பது நல்லதா ? அந்த நிலையைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது வேறுபட்ட கேள்வி. மருத்துவ மனையும் பள்ளிக்கூடமும் ஒன்றாக வைக்கலாமா வேண்டாமா என்பதை நல்ல முறையிலே பரிசீலனை செய்துதான் ஏற்பாடு செய்கிறோம். இதையெல்லாம் சுகாதார இலாகா ஆராய்ந்துதான் முடிவு எடுக்கப்படுகிறது.

* 192 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை தலைமை மருத்துவ மனையில் குழந்தைகளுக்கு என ஒதுக்கப்பட்டுள்ள படுக்கைகளை அதிகமாக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. சு. துரைசாமி : கோவையிலிருக்கிற இந்த குழந்தைகள் மருத்துவ மனையில் போதுமான படுக்கை வசதிகள் இல்லாத காரணத்தாலே வசதிக் குறைவாக இருக்கிறது. எனவே அதிகமாகப் படுக்கை வசதிகளை ஏற்படுத்த விரைவிலே அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்பொழுது 90 குழந்தைகளுக்காகப் படுக்கை வசதி அங்கே செய்துதரப்பட்டு இருக்கிறது. தினமும் 120 குழந்தைகள் அங்கே சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிருர்கள். பொதுவாக நாளுக்கு நாள் தங்கிச் சிகிச்சை பெறுகிறவர்களும், அவுட் பேஷண்ட் ஆக சிகிச்சை பெறுகிறவர்களும் அதிகமான அளவில் வருவதால் அந்த அளவுக்குச் சிகிச்சையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, கோவை மருத்துவ மனையில் லைன்ஸ் கிளப்பினர் அதிகமான படுக்கை வசதிகளைச் செய்து தருவதாக விண்ணப்பம் செய்து இருக்கிருர்களே, அப்படியென்ருல் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தற்பொழுது அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. இரா. மாணிக்க வாசகம் : தலைவர் அவர்களே, கோவை மருத்துவ மனையில் குழந்தைகளைக் கவனிப்பதற்குத் தனிப் பயிற்சிபெற்ற சில்ரன் ஸ்பெஷலிஸ்டுகளைப் போடும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கேள்வி அந்த மருத்துவ மனையிலே இருக்கிற குழந்தைகளின் படுக்கை வசதிகளை அதிகப்படுத்துவது குறித்து உள்ளது. அவர்களுடைய சிகிச்சைக்காக மேலும் மருத்துவ நிபுணர்களைப் போடுவது பற்றித் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டறவு நூற்பாலை

* 193 வின—**திரு. ெய. சௌந்திரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரிலுள்ள திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் அரசு நியமித்துள்ள நெறியாளர்கள் எத்தனை பேர் ?

(இ) சட்டப்பேரவை உறுப்பினர் யாராவது நெறியாளராக நியமிக்கப் பட்டுள்ளாரா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகளுக்குக் கைத்தறி நெறியாளர்தான் நெறியாளர் குழுவில் அங்கத்தினர்களை நியமிக்கின்ருர். தற்போது திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் கைத்தறி நெறியாளரால் நியமிக்கப்பட்ட 14 உறுப்பினர்கள் உள்ளனர்.

(இ) மேற்படி ஆலையின் நெறியாளர் குழுவில் திரு. ஆர். நாகசுந்தரம், எம்.எல்.ஏ. ஒரு நெறியாளராக இருக்கிருர்.

Deputy Inspectors of Schools

* 194 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government is conducting a one-month "induction course" for Deputy Inspectors of Schools at the State Institution of Education, Madras; and

(*b*) if so, the object and aim of this "induction course"?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.